

மயிலாடுதுறை மாவட்டம்,பூம்புகார் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற மயிலாடுதுறை மாவட்டச் செயலாளர் நிவேதா எம். முருகன் தனது பூம்புகார் சட்ட மன்றத் தொகுதி செம்பனார் கோயில் வடக்கு ஒன்றியத்தில் வாக்காளர்களுக்கு நேரில் சென்று நன்றி தெரிவித்தார்.உடன் செம்பனார்கோயில் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் பி.எம்.அன்பழகன், தகவல் தொழில் நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் பி.எம்.ஸ்ரீதர், மாவட்ட பிரதிநிதி தென்னரசன், மற்றும் விஸ்வநாதன் உள்ளிட்ட கூட்டணி கட்சி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### கோவையில் காவலர்கள் தாக்கியதால்

# வலிப்பு ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட வாலிபர்!

## காவல்துறையினர் மறுப்பு!

கோவை, மே.29-

கோவையில் காவல் நிலையத்தில் காவலர்கள் தாக்கியதால் வலிப்பு ஏற்பட்டு வாலிபர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அதற்கு காவல்துறையினர் மறுப்பு தெரிவித்துள்ளனர்.

கோவை சிங்கா நல்லூரை அடுத்த நீலிக் கோணாம்பாளையம் பகுதியைச் சேர்ந்தவர் சாந்தி. இவரது மகன் மணிகண்டன் (24). கடந்த 24ம் தேதி (ஞாயிற்றுக்கிழமை) அன்று மணிகண்டன் தனது நண்பர்களுடன் சேர்ந்து அப்பகுதியில் உள்ள டாஸ்மாக் கடைக்கு சென்றுள்ளார். அங்கு மதுபோதையில் நண்பர்களுக்குள் தகராறு ஏற்பட்டு அடிதடியாக மாறியுள்ளது. இந்த நிலையில், பிரச்சினை குறித்து விசாரிப்பதற்காக சிங்கா நல்லூர் காவல்துறையினர் மணிகண்டனை காவல் நிலையத்திற்கு அழைத்துள்ளனர். மணிகண்டனும், அவரது தாய் சாந்தியும் காவல் நிலையம் சென்றார். அப்போது சாந்தியை வெளியே அனுப்பிவிட்டு காவலர்கள் விசாரித்த போது மணி கண்டனை தாக்கியதாக தெரிகிறது. இதனால் அவருக்கு வலிப்பு ஏற்பட்டுள்ளது. இதை கண்டு அதிர்ச்சி அடைந்த சாந்தி மகன் மணிகண்டனை மீட்டு கோவை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தார். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

இது குறித்து சாந்தி கூறுகையில் காவலர்கள் எனது மகன் மணிகண்டனை விசாரணைக்கு அழைத்து தாக்கி உள்ளனர். அதனால் வலிப்பு ஏற்பட்டு, ரத்த வாந்தி எடுத்து சிகிச்சை பெற்று வருகிறார். வலிப்பு ஏற்பட்ட போது காவலர்கள் ஆம்புலன்ஸ் கூட ஏற்பாடு செய்து தரவில்லை. நான் டாக்சி வைத்து எனது மகனை அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்தேன் என்று கூறினார்.

இதுகுறித்து காவல்துறையினர் கூறும்போது, “அடிதடி பிரச்சினையில் மணிகண்டனை விசாரணைக்கு அழைத்தோம். ஆனால் அவர் மீது எவ்வித தாக்குதலும் நடத்தவில்லை. விசாரிக்கும் போது பதற்றத்தில் அவருக்கு மூச்சுத்திணறல் பிரச்சினை ஏற்பட்டதால் காவல் நிலையத்தின் வெளியே அவரை அமர வைத்தோம். அந்த சிசிடிவி காட்சிகளும் உள்ளன”, என்றனர்.

### கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம் – அகஸ்தீஸ்வரம் வடக்கு ஒன்றியம்

# நல்லூர் ஊராட்சி கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் ரெ.மகேஷ் ஆலோசனைகள் வழங்கினார்!

குமரி, மே. 29–

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வடக்கு ஒன்றியம், நல்லூர் ஊராட்சி கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் 26.05.2026, செவ்வாய்க்கிழமை அன்று மாலை 5.00 மணியளவில் நல்லூர் பகுதியில் உள்ள வெங்கடேஷ் இல்ல வளாகத்தில் வைத்து அகஸ்தீஸ்வரம் வடக்கு ஒன்றிய செயலாளர் எம்.மதியழகன் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு கழக வளர்ச்சி பணிகள் தொடர்பாக நிர்வாகிகளுக்கு ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் மாநில கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை செயலாளர் என்.தில்லைசெல்வம், ஒன்றிய பொருளாளர் வெங்கடேசன் உட்பட ஒன்றிய நிர்வாகிகள், கிளை கழக செயலாளர்கள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், BLA2, BLC, BDA மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தீர்மானம்: 1 2026ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23ம் நாள் நடைபெற்ற தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் கூட்டணி கட்சி வேட்பாளருக்காக தேர்தல் பணியாற்றிய கழகத்தினருக்கும், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியினருக்கும் மற்றும் வாக்களித்த அனைத்து வாக்காளப் பெருமக்களுக்கும் மாவட்ட தி.மு.கழகம் மற்றும் அகஸ்தீஸ்வரம் வடக்கு ஒன்றிய தி.மு.கழகம் சார்பாக நன்றி தெரிவிக்கப்பட்டது.

தீர்மானம்: 2 முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளான ஜூன் 3ம் தேதி அன்று ஊராட்சி பகுதிகளில் தலைவர் கலைஞர் அவர்களின் திருஉருவப் படத்தினை வைத்து மாலை அணிவித்து மரியாதை செலுத்துவதோடு நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்புடன் கொண்டாட வேண்டுமென ஏக மனதாக தீர்மானிக்கப்பட்டது.

தீர்மானம்: 3 கழக பணியினை தொய்வின்றி நடத்த கழக தலைவர் தளபதியாரின் அன்பு கட்டளையை ஏற்று நடக்கவும், மாவட்ட கழகம் அறிவிக்கும் பணிகளை செவ்வனே நிறைவேற்றி கழகம் மீண்டும் ஆட்சி அமைக்க அயராது பாடுபட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.

## ‘வாட்ஸ் அப்’பில் வலம் வருகிறது!






உடல்நலம் பாதிக்கப்பட்டுள்ள கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை துணைச் செயலாளர் கவிஞர் நன்மாறன் அவர்களை கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை மாநில செயலாளர் கலைமாமணி இறையன்பன் குத்தூஸ், மாநில துணைச் செயலாளர் எம்,எஸ், ஹரி பாபு, சென்னை தென்மேற்கு மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை அமைப்பாளர் சண்முகநாதன் ஆகியோர் சந்தித்து உடல் நலம் குறித்து விசாரித்தறிந்தனர்.

### துரோகம் இழைத்த காங்கிரஸ் போனால் போகட்டும்:

# தளபதி ஆட்சியின் வசந்த காலம் மலர்ந்தே தீரும்!



ஒரு கூட்டணியில் பிளவு பட்டு மறு தேர்தலில் மாறுபட்டுச் செல்வது முன் பழக்கம் தான்.

1977-ல் நாடாளுமன்றத் தேர்தலில் அ.தி.மு.க., காங்கிரஸ், வ. கம்யூனிஸ்ட் ஒருபுறம். தி.மு.க.. ஜனதா, மார்க்சிஸ்ட் மறுபுறம். ஆனால் 6 மாதம் கழித்து நடந்த சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.க.வுடன், மார்க்சிஸ்ட், ஜனதா தனியாகவும், தி.மு.க. தனியாகவும், காங்கிரஸ் உடன் வ. கம்யூனிஸ்டும் என மாறுபட்டது. அது முதல் தமிழகத்தில் கூட்டணி மாறுவது பழக்கம். ஆனால் ஒரு தேர்தல் முடிந்தவுடன் அதில் இணைந்து வெற்றி கண்டவர்கள் கையெழுத்து மை காய்வதற்குள், சாப்பிட்ட கை ஈரம் காய்வதற்குள் நன்றி கூட சொல்லாத நிலையில்,

யாரை எதிர்த்துப் போட்டியிட்டோமோ அவர்களிடமே சேர்ந்து கொண்டு, தோள் கொடுத்து உயர்த்தியவர்களை உதைப்பது சரியாகுமா என்று தான் தி.மு.க.வின் தொண்டர்கள் கேட்கிறோம்.

இதில் காங்கிரஸ் மட்டும் தான் ஒரே இரவில் சொல்லாமல் ஓடிப் போனது. பாசமும் உரிமையும், அன்பும் அதிகம் உள்ளவர்கள் பிரிவதை யாரும் விரும்ப மாட்டார்கள். அந்த வகையில் தான் தி.மு.க. தங்களிடம் அதிகம் வருந்துவதாக திருமாவளவன் நினைப்பதால் தான். “ஆ.ராசா இப்படிக் கூறியிருக்கிறாரே” என்று கேட்கும்போது அண்ணன் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் அனைத்தையும் அறிவார். தொண்டர்கள் விருப்பு வெறுப்புகளை விதைக்காதீர்கள் என்று அறிவுறுத்தியிருக்கிறார்.

அதே போல் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் பொதுச் செயலாளர். சிந்தனைச் செல்வன். தி.மு.க. தலைவரின் கருத்தை தான் பார்க்க வேண்டும் “எந்த முடிவு எடுப்பதற்கும் அவர்களுக்கு உரிமை உண்டு” என்று தளபதி சொல்வதன் மூலம் நாங்கள் மாற்று அணியில் சென்று அதிகாரம் பெறுவது தளபதிக்கு வருத்தம் இல்லை என்று காட்டுகிறது என்கிற பொருளில் கடந்து போகிறார். இது சிலருக்கு வருத்தம் தரலாம், அந்த அளவு அவர்களுக்கு பாசம் இருக்கிறது. உரிமை இருக்கிறது.

ஆனால் தேர்தலுக்கு இரு மாதம் முன்பே கூட்டணியில் மாறுபட்டு பேசிக்கொண்டே அதிகம் சீட்டையும் பெற்று, ராஜ்யசபா சீட்டையும் பெற்ற காங்கிரசினர் எங்கள் வருத்தத்தின் நியாயத்தை உணர்ந்து அமைதி காக்காமல், ஆறுதல் தராமல், வன்முறைச் சொற்களை வெளியிட்டால் இந்தியா முழுவதும் காங்கிரசுக்கு அவப்பெயர் தரும்.

ஒரு காலத்தில் தளபதி இல்லம் தேடி, மம்தா பானர்ஜி, சந்திரசேகர் ராவ், அரவிந்த் கெஜ்ரிவால் வந்தார்கள். வந்தவர்கள் பா.ஜ.க.வை எதிர்த்திட காங்கிரஸ் அல்லாத கட்சிகளின் கூட்டணிக்கு நீங்கள் வர வேண்டும் என்றபோது, வலிமையான முதல்வர்களாக அவர்கள் இருந்தபோது. தலைமை தாங்க அழைத்த நேரத்தில், அந்த கருத்தை மறுத்து. காங்கிரஸுக்கு கை கொடுத்தவர் தளபதி ஸ்டாலின்.

2024-ல் ஒன்றியத்தில் பா.ஜ.க. ஆட்சி அமைக்க 20 சீட் தேவை என்கிற சூழலில், 5 அமைச்சர்களை பெற்றுக் கொள்ளாது. காங்கிரசை ஆதரித்தவர் தளபதி. காங்கிரஸ் கட்சியினரே ராகுலை பிரதமர் வேட்பாளராக ஏற்க மறுத்தபோது ஆதரவுக் கரம் நீட்டியவர் தளபதி.

அன்று நிதிஷ்குமார் ஜெயித்தவுடன் கூட்டணியை மாற்றிக் கொண்டதால் சந்தர்ப்பவாதம் என்கிறீர்கள். இப்போது மணிக்கணக்கு இடைவெளியில் மனம் மாறிய செயலுக்கு என்ன பெயர் சந்தர்ப்பவாதமா? பக்கவாதமா?

2004-2014ல் இருந்தவர்கள். பா.ஜ.க.வுடன் சென்றார்கள் என சோடங்கி சொல்வது பொய். 2009-2014-ல் தி.மு.க. ஆதரவுடன்தான் காங்கிரஸ் ஆண்டது.

ஆனால் இன்று பொய் என்று தள்ளுபடி செய்த வழக்கை எங்கள் மீது போட்டு, கலைஞர் மகளை, இராசா அண்ணனை சிறையில் தள்ளியது யார் ஆட்சியில்?

அண்ணன் தயாநிதி மாறன் மீது வழக்கு போட்டது யார்?

தன்னை அழகாக காட்ட, தோழன் முகத்தில் கருப்பு மை பூசுவது போல உங்களை புத்தனாகக் காட்ட எங்கள் மீது வழக்கு போட்டு காயப்படுத்தினீர்கள். கேவலப்படுத்தப் பார்த்தீர்கள். புடம் போட்ட தங்கமாய் நாங்கள் வெளியில் வந்தோம்.

சொல்லிச் சொல்லி பார்த்தோம் கேட்கவில்லை. எப்போது விலகினோம். காங்கிரஸ் ஆட்சியில் இருக்கும் போதே விலகினோம். ஆட்சி அதிகாரத்தை ஓராண்டுக்கு முன்பே விட்டு விலகி ஒதுங்கினோம்.

அது மட்டுமல்ல ஆ. ராசா, தயாநிதிமாறன் இடங்கள் வழக்கால் காலியான போது. அந்த இடங்களுக்கு தி.மு.க. வேறு நபர்களை தந்தால் போடுகிறோம். அவர்கள் தரும் வரை வேறு நபரை போட மாட்டோம் என மன்மோகன் சிங் அன்பு காட்டியும், ஒன்றிய அமைச்சரை ஏற்க மறுத்தவர்கள் தி.மு.க.வினர். இரண்டே இரண்டு மாநில அமைச்சர்களுக்காக பல்லை காட்டி ஓடிய துரோகிகள் அல்ல.

அதற்குப் பின் இதுநாள் வரை நாங்கள் பா.ஜ.க. பக்கம் போகவே இல்லை. 2014ல் தனித்து நின்றோம். 2019, 2024-ல் காங்கிரஸுடன் தானே இருந்தோம்.

காங்கிரஸ் கட்சியினர் “தளபதி, துரைமுருகன், டி.ஆர். பாலு, மூர்த்தி. பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன்” போன்றோரை காப்பாற்ற தெரியாத தி.மு.க.வினர் எங்களை பற்றி பேசலாமா என்று கேட்கின்றனர்.

ரேபரேலியில் இந்திரா காந்தி, ராஜ் நாராயணனிடம் தோற்றதும், முன் நடந்த தேர்தலில் ராகுலும் ஒரு நடிகை சுருதி ராணியிடம், தனது தொகுதியில் தோற்றவர்கள் தான்.

இது குறித்து. இந்தியா முழுவதும் தேட வேண்டாம். பக்கத்தில் இருக்கும் பாண்டிச்சேரியில் பார்ப்போம். கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆன கதையாக, காங்கிரஸிற்கு கடந்த தேர்தலில் இரண்டு சீட், இந்த முறை 22 இடத்தில் நின்றும் ஒரே ஒரு சீட்தான் வென்றது. திமுகவோ 5 சீட்டுகளை பெற்றுள்ளது.

பாண்டிச்சேரியில் காங்கிரஸ் தனி ஆட்சி தான் என்று கூறிவிட்டு தி.மு.க.வுக்கு கொடுத்த 6 இடத்தில் கைச்சின்னத்தோடு ராகுலுடன் இணைந்து எடுத்த புகைப்படத்துடன் நின்று என்ன பிரயோஜனம்? இறுதியில் ஒரே ஒரு சீட்டுதான் காங்கிரஸ் பெற்றது.

காங்கிரஸின் துரோக அரசியலுக்கு பாண்டிச்சேரி மக்கள் பாடம் கற்பித்தும், திருந்தாதவர்களை என்ன செய்வது?

விசில். விசில் அலை என்று ஒதுங்கமுடியாது. பாண்டியில் மூன்று இடம் தான்.

1977-ல் எம்.ஜி.ஆர். அலை என்றால், பாண்டிச்சேரியிலும் அ.தி.மு.க.வில் ராமசாமிதான் முதல்வர். ஆனால் இப்போது விசில் அலை வீசவில்லை.



கவிஞர்
**காசிமுத்து மாணிக்கம்**
(கழக வர்த்தகர் அணிச் செயலாளர்)

காங்கிரஸின் பாண்டிச்சேரி முதல்வர் வேட்பாளர் வைத்தியலிங்கம். இவர் முன்னாள் முதல்வர். முன்னாள் எம்பி. இந்த முறை தனது தொகுதியில் நான்காவது இடத்திற்கு சென்றதுடன், தனது டெபாசிட் தொகையும் இழந்தார்.

பாண்டிச்சேரியில் காங்கிரஸ் அதிகம் கேட்டது போல், தமிழ்நாட்டில் அதிக சீட் கேட்ட காங்கிரசுக்கு அதிக சீட் ஒதுக்கியிருந்தால், பாண்டிபோல பெரும் பகுதியை இழந்து இருக்கும்.

2006-ல் தி.மு.க.வை ஆதரித்தோம் என்று கூறுகின்றனர் காங்கிரசார். அதே 2006 இல் பாண்டிச்சேரியில் காங்கிரஸ், தி.மு.க. ஆதரவில் ஆட்சி அமைத்ததை மறந்து விட்டனர்.

தமிழ்நாட்டில் அன்று தி.மு.க. கூட்டணி 165 தொகுதிகளில் வெற்றி பெற்றது. தோழமையில் காங்கிரஸ் மட்டுமல்லாது கூட்டணியில் பா.ம.க.. கம்யூனிஸ்டுகள் நிறைந்த காலம். யார் ஒருவர் ஆதரித்தாலும் போதும் திமுக ஆட்சி நிலைக்கும்.

திருப்பத்தூரில் வாக்கு கேட்ட ஒரே ஒரு தனி மனிதன் கூட என்னால் நீ எம்.எல்.ஏ. என்று கூறுவது போல கூட்டணி கட்சியிலிருந்த நான்கு கட்சியும் எங்களால்தான் கலைஞர் ஆட்சி என்கின்றனர்.

1967-க்குப் பிறகு தி.மு.க. அ.தி.மு.க. ஆட்சியில் யாருக்கும் கூட்டணி கட்சியினருக்கு பங்கு தரவில்லை என்கிறார்கள். இப்போது விஜய் மெஜாரிட்டி வந்து தோழமைகளுக்கு தரவில்லை. எதிரணியிலிருந்து குதிரை பேரம் பேசித்தான் ஆட்சியையே பாதுகாக்க முடிகிறது என்பதால் கொடுத்தார்.

1971-ல் கூட தி.மு.க. காங்கிரஸ் கூட்டணி வெற்றி பெற்றது. 71 -ல் காங்கிரஸ், தி.மு.க.வுக்கு ஒன்றியத்தில் பங்கு கொடுத்ததா?

1994-ல் கர்நாடகாவில் அ.தி.மு.க.வின் பக்தவச்சலம் வென்ற போது காங்கிரஸ், அ.தி.மு.க.விற்கு கூட்டணி ஆட்சியில் பங்கு தந்ததா? முனியப்பா எம்.எல்.ஏ. ஆக 1999-ல் வென்றார். ஆட்சியில் பங்கு கொடுத்ததா காங்கிரஸ்?

காங்கிரஸ் பங்கேற்கிற கூட்டணியை தான் மக்கள் விரும்பி ஆதரவளித்து வெற்றி பெற செய்திருக்கிறார்கள் என்று ராஜேஷ்குமார் கூறுகிறார்.

1996-60 காங்கிரஸ் அ.தி.மு.க. கூட்டணியை மக்கள் ஏற்றுக்கொண்டார்களா? 2014ல் காங்கிரஸ் கூட்டணியை மக்கள் ஏற்றார்களா?

இதற்காகத்தான் 2016 தேர்தலில் ஜெயலலிதா யார் வேண்டுமானாலும் அ.தி.மு.க. கூட்டணிக்கு வரலாம். ஆனால் எல்லோரும் இரட்டை இலை சின்னத்தில்தான் நிற்கவேண்டும் என்று கூறினார். அதனால் தான் முதன்முறையாக தமிழ்மாநில காங்கிஸ் கூட இரட்டை இலை சின்னத்தில் நின்றது. 234 தொகுதியிலும் இரட்டை நிலை நின்றது.

13 நாளில் தனக்கு மெஜாரிட்டி இல்லை என இராஜினாமா செய்தவர் வாஜ்பாய். 13 மாதத்தில் என் ஆட்சிக்கு ஆதரவு இல்லை என இராஜினாமா செய்து தேர்தலை சந்தித்தவர் வாஜ்பாய். நேர்மையாக தேர்தலை சந்தித்தவன் சங்கி என்றால், எதிர்கட்சிகளை இழுப்பது, எம்.எல்.ஏக்களை இராஜினாமா செய்ய வைப்பது என குறுக்கு வழியில் குதிரை ஆட்சி நடத்துபவரை எப்படி அழைப்பது? சொங்கி என்றா? நாச சக்தி என்றா?

விஜய் தனக்கு ஆதரவு இல்லை எனில், கௌரவமாக இராஜினாமா செய்துவிட்டு ஒதுங்கி கொள்வதோ அல்லது மீண்டும் தேர்தலை சந்திப்பது தான் ஜனநாயகம்.

எத்தனை கட்சிகள் பிரிந்தாலும் இந்த ஆட்சி சென்று, தளபதி ஆட்சி வரும் காலம் - வசந்த காலம், கண்டிப்பாக மலர்ந்தே தீரும்.